சென்னை நூலக ஆணைக்குழுவில் மட்டுமே மேற்கண்ட இனத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

(உ) ஏதுமில்லை. நூலக வரியாக கிடைக்கும் வரவைக் காட்டிலும் ஏற்படும் அதிகப்படியான செலவினங்களை ஈடுகட்ட, அரசின் நூலக வரி இணைமானியம், பராமரிப்பு மானியம், இதர வரவினங்கள் போன்றவைகளை அந்தந்த நிதியாண்டில் வசூலான நூலக வரியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதால் நூலகவரி வருமானத்தில் மிஞ்சிய தொகை ஏதுமில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

(1) மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் போடாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள், மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவிக் காலம் முடிந்து, புதிய துணை வேந்தர் அங்கு போடாத காரணத்தால் அந்தப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சீர்கேடு, பரபரப்பு, பதட்ட நிலை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள். இது, எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

3. தகவல் கோரல்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 57 "Any member desirous of raising a discussion on an urgent matter of administration or public importance ...." என்று கூறுகிறது. நேற்றைய தினம் ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதிக்க இந்த அவையில் ஒரு அரை மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதை இங்கே எழுப்புவதற்குக் காரணம் இன்று கடைசி நாளாக இருப்பதுதான்.